SEPTEMBER 07, 2020
MONDAY
VOL: 006/089
RS. 10.00
LATE CITY★

விலை Rs.10

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

20ஐ நிறைவேற்றுவதில் அரசாங்கத்துக்குச் சிக்கல்:

# 2/3 இல்லை



**திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானம்**

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக அறிவித்துள்ளது**

**திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை என, தப்புல டி லிவேரா அறிவிப்பு**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை, செப்டெம்பர் 2ஆம் திகதியன்று, வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டிருந்தது. ஜனாதிபதிக்கு ஆகக்கூடுதலான அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே ஆகக் கூடுதலான திருத்தங்கள் 20ஆவது திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சிகள், அந்தத் திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

உள்ளே

‘முஸ்லிம்களின் காணிகள் மாயக்கல்லில் மாயமாகின்றன’ முழுச் செய்தி P4






## 20க்கு எதிரணியில் 09 பேர் ஆதரவு?

அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் வகையில், எதிர்க்கட்சியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம், ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் பேச்சுவார்த்தைகளில் ஈடுப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு குழுக்களைச் சேர்ந்த ஒன்பது பேரை, ஆளும் தரப்புக்கு இழுத்தெடுக்கும் வகையிலேயே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

நாடாளுமன்றம் நாளை கூடும்:

## அமைச்சுசார் ஆலோசனை குழுக்கள் 28 நியமிக்கப்படும்

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டம், நாளை (08) ஆரம்பமாகி, வெள்ளிக்கிழமை (11) வரையிலும் நடைபெறும். அன்றையதினம், மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மீதான அனுதாப பிரேரணை, நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படும்.

நாளை (08), பாதுகாப்பு,



நிதி, நகர அபிவிருத்தி, நீதி, வெளிநாட்டலுவல்கள் உள்ளிட்ட அமைச்சுசார் ஆலோசனை குழுக்கள் 28 நியமிக்கப்படும்.

தொடர்ச்சி P2

## ‘160 பேரின் ஆதரவு 20க்கு கிடைக்கும்’

**ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டமையால் கடந்த ஐந்து வருடங்களுக்குள் நாடு பின்னோக்கிச் சென்றது**



அரசமைப்பின் 20ஆவது திருத்தம், 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அறிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, அந்தத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 160 பேரின் ஆதரவு கிடைக்குமெனத் தெரிவித்தார்.

“இந்நிலையில், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நல்ல பல விடயங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். அதில், நாட்டுக்கு பங்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சரத்துகள் நீக்கப்பட்டே, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது” என்றார்.

தொடர்ச்சி P2

ஐ.தே.கவின் ஆண்டுவிழா;

## ஒருவரின்றி நடைபெற்றது

ஐக்கிய தேசிய கட்சியின், 74ஆவது ஆண்டு விழா, கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் மிகவும் எளிமையான முறையில், நேற்று (06) நடைபெற்றது.



தொடர்ச்சி P2

## ‘எனக்கு கவலையில்லை’

■ செந்தூரன் பிரதீபன்

யுத்தத்திலும் தேர்தலிலும் வென்றவர்களும் உள்ளனர்; தோல்வியடைந்தவர்களும் இருக்கின்றனர் எனத் தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தேர்தலில், மக்களால் நிராகரிக்கப்பட்டு, நான் தோல்வியுற்றேன். அதற்காக, எனக்கு எந்தவொரு கவலையும் இல்லை என்றார்.

தொடர்ச்சி P2





## தேரோட்டம்...

தேரோடும் கோவிலென கிழக்கில் பெயர்பெற்ற மட்டக்களப்பு– கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றி ஈஸ்வரர் கோவிலின் தேரோட்டம், நேற்று (06) ஞாயிற்றுக்கிழமை (06) மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது. ஓகஸ்ட் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான, வருடாந்த திருவிழா இன்று (07) தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

(படங்களும் தகவலும் வ.சக்தி வ.திவாகரன்)

## முட்டை விலை குறைந்தது

முட்டை ஒன்றின் விலையை, இன்று (07) முதல் 2 ரூபாயால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கத்தினர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் (05) முக்கியக் கலந்துரையாடலை நடத்தினர். அதன்போதே, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ‘மகாவலி நீர்த்தேக்க பகுதியில் சிறிய நிலநடுக்கம் ஏற்படும்’



■ ஷேன் செனவிரத்ன

மகாவலி நீர்த்தேக்க பகுதியில், எதிர்வரும் காலங்களில் சிறிய, சிறிய நிலநடுக்கங்கள், குறுகிய காலத்துக்குள் ஏற்படக்கூடுமென பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் பேராசிரியர் சி.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஐ.ம.சக்தி இன்று முடிவு

**நிபந்தனைகள் இன்றி, செயற்படுவதற்கு தயார்**



அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில், எதிரணியின் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தமது தீர்மானத்தை இன்று (07) அறிவிக்கவுள்ளது.

தொடர்ச்சி P2

போகம்பறை சிறை

## கைதிகளுக்கு ஒதுக்கம்

விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகளைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக, கண்டி-பழைய போகம்பறை சிறைச்சாலை கட்டடத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.



தொடர்ச்சி P2

## சுழன்றடிக்கிறது சுழல்காற்று; அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

நாட்டில் தற்போது நிலவுகின்ற மோசமான வானிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென எதிர்வுகூரியுள்ள வானிலை அவதான நிலையம், காற்றின் வேகம் அதிகரித்து இருக்கும் என்பதால், அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2/3 இல்லை

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி ஆகியன, 20ஆவது திருத்தம் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளன. இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதனிடையே, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு, ஆளும் அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை போதுமானதென சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அறிவித்திருந்தார். எனினும், தற்போதைய நிலைமையில், நாடாளுமன்றத்தில் ஆளும் அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லாமல் இருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

225 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்றத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 145 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அதில், சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தன, மரண தண்டனைக் கைதியான சொக்கா மல்லி என்றழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகர ஆகிய இருவரையும் நீக்கிவிட்டால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 143ஆகும்.

அவர்களுக்கு மேலதிகமாக, அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் பங்காளிக் கட்சிகளான, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அத்தாவுல்லாஹ் தலைமையிலான இலங்கை தேசிய காங்கிரஸ், பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியில் அங்கம் வகிப்போர் அடங்கலாக, அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்காக 05 உறுப்பினர்கள் மேலதிகமாக உள்ளனர். அவர்களையும் சேர்த்தால் ஆளும் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 148ஆகும்.

தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில், ஆளும் தரப்பில் 149 பேர் மட்டுமே தற்போது உள்ளனர். இதனால், எதிரணியில் இருக்கும் உறுப்பினர்கள் சிலரை, அரசாங்கத்துக்கு இழுத்துக்கொள்ளும் வகையில் பேரம் பேசுதல்கள் இடம்பெறுவதற்காக, தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சுசார்...

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், குழுவின் தவிசாளராக இருப்பார். இராஜாங்க, பிரதியமைச்சர் உட்பட ஐந்து உறுப்பினர்கள், குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

அத்துடன், அரசாங்கத்தின் நிதி பற்றிய குழு, உயர் பதவிகள் பற்றிய குழு ஆகியவற்றுக்கு 18 உறுப்பினர்கள், நாளையதினம் (08) நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சர் யார்? என்பது இன்னுமே மர்மமாக இருக்கிறது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் நான்கு மாதங்களுக்காக, இடைக்கால கணக்கறிக்கையை அரசாங்கம் ஓகஸ்ட் 27ஆம் திகதியன்று சமர்ப்பித்திருந்தது. அதில், பாதுகாப்பு அமைச்சுக்கு 174 ரில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு, இவ்வளவு பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு ஆளும் தரப்பினர் பதில் எதையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# '160 பேரின் ஆதரவு...

பலப்பிட்டியவில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த ஐந்து வருடங்களுக்குள் நாடு பின்னோக்கிச் சென்றது. ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டமையால் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டது. அதற்கு, அரசமைப்பின் 19ஆவது திருத்தமே பிரதான காரணமாக அமைந்திருந்தது" என்றார்.

# ஒருவரின்றி நடைபெற்றது

கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் ஸ்தாபகர் மறைந்த டி.எஸ். சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

கட்சியின் தலைமைத்து பதவி, பெரும்நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும் போது, ஆண்டுவிழா அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரேனும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத நிலையிலேயே 74ஆவது ஆண்டுவிழா அனுஷ்டிக்கப்பட்டது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல், ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று நடைபெற்றது. அதில், ஐக்கிய தேசிய கட்சி, எந்தவோர் ஆசனத்தையும் பெறவில்லை.

இதேவேளை, அக்கட்சிக்கு கிடைத்துள்ள ஒரேயொரு தேசிய பட்டியலும் இன்னும் நிரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கைதிகளுக்கு ஒதுக்கம்

கொழும்பு, மத்திய மாகாணத்திலுள்ள சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டிய கைதிகளை, முதலில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரையிலும் 500க்கும் அண்மித்த கைதிகள், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அந்த எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

போகம்பறை சிறைச்சாலை கட்டடம், கண்டி நகரத்தின் முக்கிய வரலாற்று கட்டடங்களில் ஒன்றாக மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த சிறைச்சாலை, பல்லேகலைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"பல்வேறு குற்றச்சாட்டுகளால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படும் நபர்கள் 21 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்படவுள்ளனர்" என சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் பந்துல ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பூசா மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளிலேயே தற்போது கைதிகள் தனிமைப்படுத்தப்படுகின்றனர் எனத் தெரிவித்த அவர், அவ்வாறு தனிமைப்படுத்தப்படும் கைதிகள், 21 நாள்களின் பின்னர் நீதிமன்றம் உத்தரவின் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்படவுள்ளனர் என்றார்.

**பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : வீ – இக்னைட் (பீவீடி) எல்டிடீ
பதிவு செய்த முகவரி : இல. 43, கிரகறீ பிளேஸ், தெஹிவலை.
பதிவு செய்த இல : பீ வீ 125082
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 28.09.2017

கம்பனியின் பெயர் : மாகே சிலோன் (பீவீடி) எல்டிடீ
பதிவு செய்த முகவரி : இல. 465, காலி வீதி, கொழும்பு – 03.
பதிவு செய்த இல : பீ வீ 118728
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 16.09.2016

கம்பனி செயலாளர்கள்

# முட்டை விலை...


"இதற்கமைய, முட்டை ஒன்றின் சில்லறை விலை 21-22 வரை இருக்கும்" என, அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம் சரத் தெரிவித்துள்ளார்.

கோழி தீவனத்தின் விலை அதிகரிக்கப்பட்டமையை அடுத்து, முட்டையொன்றின் விலை 25 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 20க்கு எதிரணியில் 09 பேர் ஆதரவு?

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த சிலருடனேயே அரசாங்கம் இவ்வாறு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதென அறியமுடிகின்றது. அந்த ஒன்பது பேர் தொடர்பிலான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

ஆங்கில ஊடகமொன்றில் வெளியாகியிருக்கும் அந்தச் செய்தியில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீன் ஆகிய இருவரையும், அந்த கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் அரசாங்கத்துக்குள் இணைத்துக்கொள்வதில்லை என்ற முடிவில், அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 'மகாவலி நீர்த்தேக்க பகுதியில் சிறிய நிலநடுக்கம் ஏற்படும்'

இத்தகைய அதிர்ச்சிகள் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் அழுத்தம் அல்லது நீர்த்தேக்கங்களுக்கு அருகிலுள்ள சுண்ணாம்பு கற்பாறைகளின் வெடிப்பால் ஏற்படுகின்றன எனத் தெரிவித்த அவர், நீர்த்தேக்கத்தின் நீர் அதிகரித்து, குறைவடையும் போது இவ்வாறான அதிர்வுகளை எதிர்பார்க்க முடியுமென பேராசிரியர் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

"ஓகஸ்ட் 29ஆம் திகதி இரவும் அதன்பின்னர் அவ்வப்போது, விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பிரதேசங்களில் 2 ரிக்டருக்கு குறைவான அலகில், பூமியதிர்ச்சி பதிவாகியிருந்தது. இது, விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு கீழே மய்யப்பகுதியில் ஏற்பட்டது; சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை" என்றார்.

"பாறைகளில் ஏற்பட்டிருந்த அழுத்தம் குறைந்து, கூடும். அதுவே, கண்டியில் ஏற்பட்டிருந்த இரண்டு, பூமியதிர்வுகளுக்கும் காரணமாக அமைந்திருந்தது. இதனை சிறிய விடயமெனக் கருதி, நிராகரித்துவிடக்கூடாது" என்றார்.

# ஐ.ம.சக்தி இன்று முடிவு

எதிர்க்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில், எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம், நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இன்று (07) நடைபெறும். அதன்பின்னரே, எதிர்க்கட்சியின் நிலைப்பாடு, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

அரசமைப்பு பேரவையின் அதிகாரத்தில் இருந்த கணிசமான அளவு நாடாளுமன்ற அதிகாரம், ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் கொண்டுவரும் வகையில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளனவென குற்றஞ்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

20ஆவது திருத்தத்துக்கு எதிராக, எந்தவொரு தரப்பினருடனும் நிபந்தனைகள் இன்றி, செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாரென அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'எனக்கு கவலையில்லை'

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை வரவேற்கும் கூட்டம், சிறுப்பிட்டிய பகுதியில், நேற்று முன்தினம் (05) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு கொள்கைக் கோட்பாட்டைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய கோட்டாபய ராஜபக்ஷ, அதற்கான காய்களை பொதுத் தேர்தலில் நகர்த்துகின்றார் என்பதை மிகத் தெளிவாக நாங்கள், சொல்லியிருந்தோம் எனத் தெரிவித்த மாவை சேனாதிராஜா, பௌத்த-சிங்கள பெரும்பான்மை மக்களை தன்னைத் தெரிவு செய்திருந்தனர் என்பதைத் தெட்டத்தெளிவாக தெரிவித்திருந்தார்.

"தேர்தலில் வெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ, அநுராதபுரத்தில், எல்லாளனை துட்டகைமுனு தோற்கடித்து மண்ணில் பதவிப் பிரமாணம் செய்து, சிங்கள மக்களுக்கு மற்றுமொரு செய்தியை கூறியிருந்தார். அது, நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது" என்றார்.

# சுழன்றடிக்கிறது சுழல்காற்று...

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றதென அறிவித்துள்ள அந்நிலையம், கடலலை சுமார் இரண்டரை மீற்றருக்கு மேல் உயர்ந்தெழும். ஆகையால், கரையோரங்களில் வசிப்போரும், கடலுக்குச் செல்வோரும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமென, அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

சிறியரக படகுள் மற்றும் ஒருநாள் படகுகளின் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை, மறு அறிவித்தல் வரையிலும் தவிர்க்குமாறும் மீன்பிடி மற்றும் நீர்வளத் துறை திணைக்களம் அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

நாட்டைச் சுற்றியிருக்கும் ஆழமான கடற்பரப்பு மற்றும் ஆழமற்ற கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம், ஒரு மணிநேரத்துக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசுமென எதிர்வு கூரப்பட்டுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், காற்றின் வேகம் மணித்தியாலயத்துக்கு நாடு முழுவதும் 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சூரியனின் தென் திசை நோக்கிய தொடர்பான இயக்கத்தின் காரணமாக இன்று (07) வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது. இதேவேளை, ஆகக்கூடிய வெப்பநிலை பொலன்னறுவையில் 36.2 பாகை செல்சியசாக பதிவாகியிருந்தது.

# நிவ் டயமண்ட் ; ஆராய்வதற்கு நிபுணர் குழு இலங்கை வருகை

இந்தியாவுக்கு எரிபொருள் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது, இலங்கையின் கிழக்கு கடற் பிராந்தியத்தில் வைத்து, நிவ் டயமண்ட் கப்பலுக்குள் தீ பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் ஆராய்வதற்காக, ஐக்கிய இராச்சியத்தின் நிபுணர் குழுவொன்று, நேற்று (06) மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

கப்பலுக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் நிறுவனத்திலிருந்தே, மேற்படி நிபுணர் குழுவினர், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நிவ் டயமண்ட் கப்பல் மூலம் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில், அதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது பற்றிய ஆலோசனைகளை வழங்குவதற்காக, இந்தக் குழு இலங்கை வந்துள்ளது. இதில் இங்கிலாந்து, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளடங்கியுள்ளனர் என வும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையை வந்தடைந்துள்ள மேற்படி குழுவினர், இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் இணைந்து, தீ பரவலால் பாதிக்கப்பட்ட நிவ் டயமண்ட் கப்பலை, நேற்று (06) மேற்பார்வை செய்தனர்.

தீ பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கை கடற்பரப்பிலிருந்து, 75 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டுள்ள இந்தக் கப்பலை, குளிர்ச்சியாக வைத்திருக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியில், இலங்கை கடற்படைக்குச் சொந்தமான, ஓஷன் பிலிஸ் எனப்படும்"டக்" இயந்திரம் ஒன்று இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்திய கடற்படை பாதுகாப்புப் பிரிவுக்குச் சொந்தமான ஆமியா, ஆஷிக் என்ற இரு கப்பல்களும் இணைக்கப்பட்டுள்ளன என்றும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இந்திய கடற்படை பாதுகாப்புப் பிரிவுக்குச் சொந்தமான ட்ரோன் விமானமொன்று, மேற்படி கப்பலை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், வானிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள கடும் காற்றின் காரணமாக, கப்பலைப் பாதுகாக்கும் பணிகள் மிகவும் அவதானமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அறியமுடிகிறது.

நிவ் டயமண்ட் கப்பலிலிருந்து மீட்கப்பட்டு, இலங்கைக்குச் சொந்தமான சிதுரல கப்பலில் பாதுகாப்பாக உள்ள



ஊழியர்களுக்கு, அவர்களுடைய உறவினர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்வதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளனவென, இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

20 ஆவது திருத்தத்தின் ஊடாக:

# ‘டயஸ்போராவினருக்கான கதவுகள் திறந்துள்ளன’

‘அரசமைப்பின் 19 ஆவது திருத்ததின் ஊடாக, டயஸ்போராவினர் நாட்டுக்குள் நுழைவதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், 20 ஆவது திருத்தமானது, டயஸ்போராவினருக்கான கதவுகளை மீண்டும் திறந்துள்ளது’ எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், நல்லாட்சி அரசாங்கத்தின் குறைபாடுகளை அறிந்துகொண்டு நாட்டு மக்கள் வாக்களித்திருந்தபோதும், எதிர்காலத்தில் வரப்போகும் அச்சுறுத்தலைக் கண்டுகொள்ளத் தவறிவிட்டனர் எனவும் சாடினார்.

அத்துடன், 20 ஆவது திருத்தத்தின் ஊடாக, அந்த நிலைமையை அறிந்துகொள்ள முடியுமெனத் தெரிவித்த அவர், இந்தத் திருத்தத்தின் ஊடாக, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களுக்கு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றார்.

வடக்கில் டயஸ்போராவினரும் தேர்தலில் போட்டியிட்டு, தமிழ் வாக்குகளைப் பெற்று நடாளுமன்றத்துக்கு வருவதற்கான வாய்ப்பை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக, டயஸ் பேராவினருக்கான கதவுகளை நல்லாட்சி அரசாங்கம் அடைத்து வைத்திருந்ததாகத் தெரிவித்த அவர், நாட்டுப்பற்று



பற்றி பேசியவர்கள், டயஸ்போராவினருக்கு கதவுகளை திறந்து வைத்துள்ளனர் என்றார்.

அதேபோல், 19 ஆவது திருத்தத்தின் ஊடாக, ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்ற நிலைமை மாறியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், இதனால் ஜனாதிபதி மனித உரிமை மீறல்களை செய்துவிட்டு தப்பிக்கொள்ளவும் முடியும் என்றார்.

ஆகவே, நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்று உருவாகப்போவதை எவராலும் தடுக்க முடியாதெனத் தெரிவித்த அவர், இவ்வாறு அதிகாரம் இல்லாத நாடாளுமன்றம் ஒன்று அவசியமா? என்றும் வினவினார்.

அதேபோல், 20 ஆவது திருத்தத்தில் பெறுகை ஆணைக்குழு நீக்கப்பட்டுள்ளதால், அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் திருட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வழி திறக்கப்பட்டுள்ளது என்று கூறிய எஸ்.எம். மரிக்கார், கணக்காய்வு ஆணைக்குழு நீக்கப்பட்டதால், கணக்காய்வாளர் ஜனாதிபதிக்கு மாத்திரமே பொறுப்புகூற வேண்டியவராக உள்ளார் எனவும் தெரிவித்தார்.

# களுத்துறை சிறையிலிருந்து தப்பியோடியவர் சிக்கினார்

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து, கடந்த மாதம் தப்பியோடிய கைதியொருவர், தொடங்கொட 8 ஆம் ஏக்கர் தோட்டப் பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கைதி, கடந்த மாதம் 03 ஆம் திகதி மேலும் இரு கைதிகளுடன் சிறைச்சாலையில் இருந்து தப்பியோடியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பெண்ணொருவரின் தங்க நகையை அபகரித்தமை மற்றும் வெடி குண்டொன்றை தம்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், ஜூலை மாதம் 30 ஆம் திகதி முதல் இவருக்கு விளக்கமறியலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நான்கு நாள்கள் கடந்த நிலையிலேயே, மேற்படி கைதி சிறையிலிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

தப்பியோடிய கைதி அவரது வீட்டில் மறைந்திருப்பதாக, மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, பொலிஸார் கைதியின் வீட்டைச் சுற்றிவளைத்து அவரைக் கைதுசெய்துள்ளனர்.

# தபால் திணைக்களத்துக்கு ரூ.5,000 மில்லியன் நட்டம்

இலங்கை தபால் திணைக்களம், கடந்த 2019 ஆண்டில் மாத்திரம் 5,000 மில்லியன் ரூபாய் நட்டத்தை ஈட்டியுள்ளதாக, தபால் சேவைகள், ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள பிரதான தபால் நிலையத்தை மேற்பார்வை செய்ததையடுத்து, கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்துள்ள அவர், ஒவ்வொரு வாரமும், அரச நிறுவனங்கள் தொடர்பான அறிக்கையொன்றை, ஜனாதிபதிக்குக் கையளிக்க வேண்டும் எனவும் தபால் திணைக்களத்தின்



வருமானத்தில், 70-80 சதவீதமானவை, ஊழியர்களின் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுக்காக செலவிடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால், தபால் சேவையைத் தரமானதாகக் கட்டமைக்க வேண்டியது அவசியமாகுமெனத் தெரிவித்துள்ள அவர், அதற்காக 2021-2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டமொன்றை தயாரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், தபால் திணைக்களம் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சென்று, தபால் நிலையங்களிலுள்ள குறைபாடுகள் மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் குறைபாடுகளை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# கந்தகாட்டில் 14 பேர் மட்டுமே உள்ளனர்

முப்படைகளின் கண்காணிப்பின் கீழ் உள்ள, தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து, தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த, 552 பேர் தங்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இதுவரையில் 37,522 பேர் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்துள்ளனரென, கொவிட் -19 தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 7,403 பேர், நாடளாவிய ரீதியிலுள்ள 70 தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினம் (05) மாத்திரம் 1,880 பேருக்கு, பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளதுடன், நாட்டில் இதுவரை 37,610 பேருக்கு, பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை




குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கந்தகாடு, புனர்வாழ்வு மய்யத்திலிருந்து, 626 பேர் முழுமையாக குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனரென, கொவிட் -19 தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளதுடன், தற்போது அங்கு 14 பேர் மாத்திரமே எஞ்சியிருந்தனர் எனவும் தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 வைரஸ் நோயாளர்களாக நாட்டில் இதுவரை 3,121 பேர் அறியப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில், 2,925 பேர் முழுமையாக குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் செயலணி தெரிவித்துள்ளது.

# வெலிக்கடை சிறையிலிருந்து சட்டவிரோத உபகரணங்கள் மீட்பு

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண் கைதிகள் சிறை கூடத்திலிருந்து, அலைபேசிகள் உள்ளிட்ட சட்டவிரோத உபகரணங்கள் சிலவற்றை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில், சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு நடத்திய விசேட சோதனையின்போதே, இத்தகைய உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளனவென, சிறைச்சாலை கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதன்போது, 13 அலைபேசிகள், 07 சிம் அட்டைகள், 150 பற்றரிகள் உள்ளிட்ட




மேலும் சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி உபகரணங்கள் மீட்கப்பட்ட சிறைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதிகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு வழங்கும் தகவலுக்கமைய, மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் ஆணையாளர் நாயகம் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

# களுத்துறையில் மண்சரிவு அபாயம்

என்.ஜெயரட்ணம்

களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, மோல்க்காவ கொஸ்குலன கிராம அலுவலகர் பிரிவில், மலைப் பாங்கான பகுதியில் இருந்து, பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளதால், அம்மலைப் பிரதேசத்தின் கீழ்ப் பகுதியில் வசிக்கும், 13 குடும்பங்களை வேறு இடங்களில் தற்காலிகமாக தங்கவைக்க நடவடிக்கை



எடுத்துள்ளதாக, களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பதிகாரி கேர்ணல் சுஜித் குலசேகர தெரிவித்தார்.

இப்பகுதியானது, கடந்த 2017ஆம் ஆண்டில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால், மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதியாகவும் காணப்படுவதாக, அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக, கற்பாறைகள், மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால், விபரீதங்கள் தவிர்த்துக்கொள்ளும் நோக்கில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, அவர் மேலும் தெரிவித்தார்.


# 815 கிராம் மஞ்சளுடன் கற்பிட்டியில் மூவர் கைது

ஸீன் ரஸ்மின்

கற்பிட்டி- ஏத்தாளை பகுதியில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 815 கிலோ கிராம் மஞ்சள், கடற்படையினரால் நேற்று(06) மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்ய ப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி, 30 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில், கடல்




மார்க்கமாக இலங்கைக்கு இவ்வாறு மஞ்சளைக் கொண்டுவந்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில், கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போதே, உறைகளில் பொதியிடப்பட்ட நிலையில் மேற்படி மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் பயணித்ததாகக் கூறப்படும் சிறிய ரக லொறியொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்ப ட்டுள்ளதுடன்,

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி பிரதேசத்தில், கடந்த சில வாரங்களாக, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மஞ்சள் தேடுதலின் போது, கைப்பற்றப்பட்டுள்ளன.


# 20க்கு ஆளும் தரப்பு எம்.பி எதிர்ப்பு

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில், நாட்டுக்கு அநாவசியமான சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதாவது, இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள், நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த வரம்புகள் இத்திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளமை ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏற்றுக்கொள்ள முடியாத சில திருத்தங்கள், 20 ஆவது திருத்தத்தில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், நாடாளுமன்றத்துக்குக்



கொண்டுவரப்பட்ட நாட்டுக்குப் பாதகமான அரசமைப்புத் திருத்தங்களை, நீதிமன்றத்தின் முன்னிலையில் சவாலுக்கு உட்படுத்தும் இயலுமையை வழங்கியுள்ள அரசமைப்பில், திருத்தம் செய்யும்போது ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## 100 ஜோடிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

அநுராதபுரம் நகரப் பகுதியில், பொருத்தமற்ற இடங்களில் இருந்தனரெனக் கூறப்படும், 100 க்கும் மேற்பட்ட ஜோடிகள், அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு, பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், பொலிஸார் அவர்களுக்குக் கடும் எச்ச ரிக்கையை நேற்று (06) விடுத்துள்ளனர். தனியார் வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி, வீடுகளிலிருந்து வந்து ஜோடிகளாக இருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வேலைவாய்ப்பு

கேட்டரின் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள உதவியாளர்கள், சமைய ல்காரர்கள், வெய்டர்கள், காசாளர்கள் (ஆண்/பெண்) அவசியம். தொடர்பு களுக்கு- 075-5366670, எவர் டேஸ்ட் தனியார் நிறுவனம், மாலபே.

# ‘வடக்குக்கு புனர்வாழ்வு நிலையம் அவசியம்’



■ என்.ராஜ்

வடக்கில், போதைவஸ்துக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கு, புனர்வாழ்வு நிலையமொன்றை நிர்மாணிப்பது அவசியமென, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைவஸ்து பாவனை தொடர்பில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வடக்குப் பகுதிக்கு கஞ்சா, ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள்கள் கடத்தப்படுவது, உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமெனவும் அதேபோல் அரசாங்கத்தின் பல வகையான கட்டுப்பாட்டு நிலைமைகளை, மேலும் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவர வேண்டுமெனவும் தெரிவித்தார்.

போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்து, சிகிச்சை வழங்குவதற்குப் பொருத்தமான நிலையம் வட பகுதியில் இல்லையெனத் தெரிவித்த அவர், ஆகவே, வடக்குப் பகுதியில், புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமெனவும் அதற்கான முயற்சியைத் தாங்கள் முன்னெடுத்து வருவதாகவும் கூறினார்.

### முஸ்லிம்களின் காணிகள்

# ‘மாயக்கல்லில் மாயமாகின்றன’

■ ரீ.கே.றஹ்மத்துல்லா

அம்பாறை, இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு, மாயக்கல்லி மலையை அண்டிய முஸ்லிம்களின் விவசாயக் காணிகளை அபகரித்து, அங்கு பௌத்த விகாரை அமைத்து, சிங்களக் குடியேற்றம் செய்வதற்கு எடுத்துவரும் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக, அம்பாறை மாவட்ட மக்கள் நலன்புரி அமைப்பின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான சட்டத்தரணி பாறுக் சாஹிப் தெரிவித்தார்.

சட்டவிரோதமான இச்செயற்பாடு உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டுமெனவும் அவர் கோரினார்.

அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் (05) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “அம்பாறை



மாவட்டத்தில் தொல்பொருள், வன பரிபாலனம் என்ற போர்வையில், பௌத்த பேரினவாதம், தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீகக் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன” என்றார்.

“2014.10.10 அன்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் பிரகாரம், சர்ச்சைக்குரிய மாயக்கல்லி மலை உள்ளடங்கலாக 19 இடங்கள் தொல்பொருள் இடங்களாக அறிவிக்கப்பட்டிருந்தன. இதன் பின்னர், 2016 செப்டெம்பர் 27ஆம் திகதி ஒரு குழுவினரால் மாயக்கல்லி மலையில் பௌத்த சிலையொன்று அமைக்கப்பட்டது.

“இதனை இப்பிரதேச மக்கள் கண்டித்ததுடன், பாரிய எதிர்ப்புத் தெரிவித்து, நீதிமன்ற தடையுத்தரவையும் பெற்றிருந்த நிலையில், அங்கு பரிவார சகித்தியொன்றும் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

“சுமார் 250 குடும்பங்கள் வாழ்ந்து வரும் மாணிக்கமடு பிரதேசத்தின், மாயக்கல்லி மலைப் பிரதேசத்தை அண்டிய பிரதேசத்தில் 18 விவசாயிகள், அனுமதிக்கப்பட்ட காணிப்பத்திரங்களுடன் நீண்டகாலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

“மாயக்கல்லி மலையை அண்மித்திருக்கும் சுமார் 10 ஏக்கர் விவசாயக் காணியை சட்டவிரோதமாகச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், இறக்காமம் பிரதேச செயலாளர் ஆகியோர் ஊடாக மேற்கொண்டுவருகின்றனர்.

“மேற்படி காணிச் சொந்தக்காரர்களுக்குப் பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டு, தங்களது காணிகளைத் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளதுடன், இதற்கான மாற்றுக்காணியை, குடுவில் பிரதேசத்திலுள்ள வனபரிபால திணைக்களத்தின் காடுகளை அழித்து, மாற்றுக்காணிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அதேவேளை, காணிச் சொந்தக்காரர்கள் தங்களது காணிகளுக்குச் சென்று, விவசாய நடவடிக்கையை முன்னெடுக்க முடியாதவாறு, அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமை, காணியிலுள்ள பயிர்களைச் சேதம் விளைவிக்கின்றமை, பிரதேசத்தில் அச்ச நிலைமையைத் தோற்றுவிக்கின்றமை போன்ற பல மோசமான செயற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன.

“எனவே, இப்பிராந்தியத்தில் இருந்துவரும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்” என அவர் கேட்டுக்கொண்டார்.

# விபத்தில் சிக்கிய அம்பியூலன்ஸ்

■ என்.ராஜ்

பருத்தித்துறை - இமையாணன் குஞ்சர்கடைப் பகுதியில், நேற்று (06) அதிகாலை 1.30 மணியளவில், பருத்தித்துறை - மந்திகை ஆதார வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸ் ஒன்று விபத்துக்குள்ளானது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து, நோயாளி ஒருவரை, மேலதிக சிகிச்சைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு, மீண்டும் மந்திகை நோக்கிப் பயணித்த போதே, குறித்த அம்பியூலன்ஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில், வீதி மைல் கல்லும் வீதியருகில் இருந்த கடையொன்றும் சேதமாகியுள்ளன.

# அங்கஜன் எம்.பியால் வீட்டுத்திட்டம் கையளிப்பு

■ எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த், என்.ராஜ்

“அனைவருக்கும் வீடு” என்ற செயற்றிட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 113 குடும்பங்களுக்கு 0.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடுகளை நிர்மாணிப்பதற்கான முதலாம் தவணைக் கொடுப்பனவு, பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில், யாழ். மாவட்டச் செயலகத்தில், நேற்று (06) காலை நடைபெற்றது.



இதன்போது, 113 குடும்பங்களுக்கு, முதலாம் தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்டச் செயலாளரும் யாழ். ஒருங்கிணைப்புச் சபையின் செயலாளருமான கணபதிபிள்ளை மகேசன், மாவட்ட மேலதிகச் செயலாளர் ம.பிரதீபன், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எஸ். நிக்கொலஸ்பிள்ளை, வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் மின்தடை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை, கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில், அவசரத் திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் எம்.ஆர். எம். பர்ஹான், நேற்று (06) தெரிவித்தார்.

இதன்படி, நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அட்டப்பலம், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளில் இன்று (07) காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும் என்பதுடன், அட்டாளைச்சேனையில் நாளையும் (08) அதேநேரம் மின் தடைப்படும். புதன்கிழமை (09), சின்னப்பாலமுனை, உதுமாபுரம் பகுதிகளிலும் சனிக்கிழமை (12) காரைதீவு, நிந்தவூர், அட்டப்பலம் பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும், மின் தடைப்படும்.

14ஆம் திகதி, ஒலுவில், திராய்க்கேனி, நிந்தவூர், அலிவன்னியார், வீரமுனை, வீரச்சோலை பகுதிகளிலும் 16ஆம் திகதி, அட்டப்பலம், பாலமுனை, அட்டாளைச்சேனை பகுதிகளிலும் 19ஆம் திகதி, ஒலுவில் கிராமத்திலும் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரை மின் தடைப்படும்.

26ஆம் திகதி, அம்பாறை வீதி, வீரமுனை, வங்கலாவாடி, ஹிஜ்ராபுரம் பகுதிகளிலும் 28ஆம் திகதி ஒலுவில், திராய்க்கேணி, நிந்தவூர் பகுதிகளிலும் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

### கல்முனை கடற்பரப்பில் எண்ணெய்ப் படிவு?

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பு

கல்முனை கடற் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு, எண்ணெய்ப் படிவு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால், துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், சங்கமன்கண்டி கடற்பரப்பில் இருந்து 38 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கல்முனை கடற்பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான எண்ணெய் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களால் அவதானிக்கப்பட்டன.

இதனால் அச்சமடைந்த கடற்றொழிலாளர்கள், தொழிலுக்குச் செல்வதை நிறுத்தியிருந்தனர்.

இந்த விடயம்



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, “நாரா” எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (05) அவசரக் கலந்துரையாடலை நடத்திய அமைச்சர், கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தினார்.



# திறப்பு விழாவும் திருப்பலி ஒப்புக்கொடுப்பும்

■ பேரின்பராஜா சபேஷ், வ.சக்தி, எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு - வவுணதீவு, உன்னிச்சை 6ஆம் கட்டையில் மிக பழமைவாய்ந்த புனித அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்டு, நேற்று (06) திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட உள்ளூர் யுத்தம் காரணமாக, மக்கள் இடம்பெயர்வுகளால் கைவிடப்பட்டு, யுத்தத்தால் அழிக்கப்பட்ட நிலையில், சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பற்றைக் காடுகள் அடர்ந்து காணப்பட்டன.

இவ்வாலயத்தின் நிலை குறித்து, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண. பொன்னையா ஜோசப் ஆண்டகையிடம் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, அதனைப் புனரமைப்புச் செய்வதற்கு திருவுள்ளம் கொண்டு, அப்பணியை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் செயலாளர் மாணிக்கம் உதயகுமாரின் முயற்சியுடனும் ஊர் மக்கள், பண உதவிகளை வழங்கிய பரோபகாரிகள் தனவந்தர்களின் பங்களிப்புடன், இவ்வாலையம் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுத் திறந்து





வைக்கப்பட்டது.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் புராதனமானதும் பழமையானதுமான ஆயித்தியமலை, புனித திருத்தலமான சதாசகாய மாதா திருத்தல திருவிழா, ஒகஸ்ட் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நேற்று (06) மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையின் தலைமையில், விசேட ஆராதனையும் திருவிழா இறுதிநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிறைவு பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, முன்னாள் செயலாளர் மா.உதயகுமார், மாநகர மேயர் ரி.சரவணபவன், வவுணதீவு உதவி பிரதேச செயலாளர் திருமதி சதா சுபா அகியோர் மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

### வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

# ‘சமூக ஆர்வலர்களின் ஆதரவு தேவை’

■ என்.ராஜ்

வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு, சமூக ஆர்வலர்களின் ஆதரவு தேவையென்று, வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் உபதலைவர் வைத்தியர் க.நந்தகுமார் தெரிவித்தார்.

அண்மையில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்க வருடாந்த கூட்டத்தின் பின் ஊடங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், 1990ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், ஆரம்பத்திலிருந்து இன்றைய தினம் வரை மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான



திட்டங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

தமது நிறுவனத்தில் இருந்து, ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிகளை நிறைவு செய்து, அவர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி வருகின்றார்களெனவும், அவர் தெரிவித்தார்.

சமூக ஆர்வலர்கள், கொடையாளிகளின் ஆதரவு கிடைக்குமிடத்தில் தமது இந்த நிறுவனம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து, மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி புரியுமெனவும், க.நந்தகுமார் தெரிவித்தார்.

# குடியிருப்புகளுக்குள் புகுந்த சருகுப் புலி

### பாதுகாப்பாக மீட்பு

■ வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில், விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில், பொதுமக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்த சருகுப் புலி பாதுகாப்பாக மீட்கப்பட்டு, வனஜீவராசிகள் திணைக்களத்தால் கொண்டுசெல்லப்பட்டது.

நாட்டில் அழிந்துவரும் உயிரினமாகவும் பாதுகாக்கப்படவேண்டிய இனமாகவும் காணப்படுகின்ற



சருகுப் புலியானது, அண்மைக்காலமாக விபத்துகளில் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன.

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில், பெரியகல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் (05) இரவு விபத்தில் சிக்கிய சருகுப் புலியொன்றே, மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் அங்கு மக்கள் மத்தியில் அச்ச நிலையேற்பட்டது.

இந்தியா



கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை

## நான்கு மில்லியனை தாண்டியது

இந்தியாவில், கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது, நேற்றுக் காலை 9.30 மணி வரையில் 90,632ஆல் உயர்ந்து 4,113,811ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 1,065ஆல் உயர்ந்து 70,626ஆகக் காணப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி, நேற்றுக் காலை 10 மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 6,259,999ஆகக் காணப்படுவதுடன், 188,579 பேர் கொவிட்-19ஆல் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலானது, கடந்த 24 மணித்தியாலங்களில் மேலதிகமாக 30,168 கொவிட்-19 தொற்றுக்களையும் 682 கொவிட்-19ஆலான உயிரிழப்புகளையும் பதிவு செய்துள்ளதாக, அந்நாட்டு சுகாதாரமைச்சு, நேற்று முன்தினம் தெரிவித்த நிலையில், 4.1 மில்லியனுக்கும் அதிகமான கொவிட்-19 தொற்றுக்களை பிரேஸில் பதிவுசெய்துள்ளதுடன், 126,203 கொவிட்-19ஆலான உயிரிழப்புகளையும் பதிவுசெய்துள்ளது.

உலகளாவிய ரீதியில், 27 மில்லியனுக்கும் அதிகமானோர் கொவிட்-19 தொற்றுக்குள்ளானதோடு, 880,000க்கும் அதிகமானோர் கொவிட்-19ஆல் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், 18 மில்லியனுக்கும் அதிகமானோர் உலகளாவிய ரீதியில் கொவிட்-19இலிருந்து குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா



# ‘யாராலும் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது’

“எம்.ஜி.ஆர். இன்றைக்கும் அழிக்க முடியாத சக்தியாக தமிழ் நாட்டில் மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரைப் போல மாதிரிகளை உருவாக்க வேண்டுமே தவிர, யாராலும் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது” என, இந்தியாவின் தமிழ்நாட்டின் அமைச்சர் கடம்பூர் செ. ராஜூ தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் நேற்று பேசியபோதே, மேற்படி கருத்தை கடம்பூர் செ. ராஜூ வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“எம்.ஜி.ஆர் போல் சித்திரித்து படம் பிரசுரித்தால், எல்லோரும் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது. எம்.ஜி.ஆர் இன்றைக்கும் அழிக்க முடியாத சக்தியாக, தமிழ்நாட்டில் மக்கள் உள்ளங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் யார் வந்தாலும் எம்.ஜி.ஆரை முன்னிலைப்படுத்தி, எம்.ஜி.ஆரைப் போல என்று கூறி சுவரொட்டி அச்சிடுகிறார்கள் என்றால், அதிலே எம்.ஜி.ஆர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் அவர் தொடங்கிய இயக்கம் இன்றும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் அவருடைய இயக்கம் ஆட்சியில் இருக்கிறது என்றால் இன்றைக்கும் மக்கள் மனதில் எம்.ஜி.ஆர். வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரைப் போல மாதிரிகளை உருவாக்க வேண்டுமே தவிர, யாராலும் எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது.

“அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க), தமிழ்நாட்டின் மிகப்பெரிய சக்தி. தேர்தல் வருகின்ற நேரங்களில் குறைந்த பட்ச வாக்குகளைப் பெறாத கட்சிகள் கூட நாங்கள் தான் ஆட்சியைப் பிடிப்போம் என்று சொல்வார்கள். ஒரு தொகுதியில் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் வாக்குகள் பெறுபவர்கள் கூட நாங்கள் தான் முதலமைச்சர் என்று சொல்லிதான் தேர்தலைச் சந்திப்பார்கள். அது ஒரு காமெடியாகத்தான் இருக்கும். ஆனால் அடுத்தாண்டு சட்டசபைத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கப்போவது அ.இ.அ.தி. மு.க தான். அ.இ.அ.தி.முகவின் முதலமைச்சர் தான் ஆளப் போகிறார். அதைத்தெரிந்து தான் இன்று அ.இ.அ.தி.மு.கவில் இளைஞர்கள், படித்தவர்கள் என திரளானோர் தங்களை ஐக்கியப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்” என்று கூறினார்.

பங்களாதேஷ்



பள்ளிவாசலில் வாயு வெடிப்பு?:

## 17 வழிபாட்டாளர்கள் உயிரிழப்பு

பங்களாதேஷிலுள்ள பள்ளிவாசலொன்றில், வெள்ளிக்கிழமை இரவு, வழிபாட்டாளர்கள் தமது வழிபாடுகளை நிறைவு செய்ய இருக்கையில், வாயுக் குழாய் வெடிப்பு எனச் சந்தேகிக்கப்படுவதில் 17 பேர் கொல்லப்பட்டதுடன், டசின் கணக்கானோர் காயமடைந்ததாக, அதிகாரிகள், நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்குச் சற்று வெளியேயுள்ள நாராயன்கஞ் மாவட்டத்திலுள்ள பள்ளிவாசலொன்றில், வாயுக் குழாயொன்றின் கசிவால் ஏற்பட்டதாக, தீயணைப்புச் சேவை அதிகாரிகள் சந்தேகித்துள்ளனர்.

இதையடுத்து, டாக்காவிலுள்ள பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்குப் பிரத்தியேகமான வைத்தியசாலைக்கு குறைந்தது 37 பேர் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அதில் பெரும்பாலானோர் மோசமான எரிகாயங்களைக் கொண்டிருக்கின்றனரென, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையொன்று உள்ளடங்கலாக 17 பேர் எரிகாயங்களுக்குள்ளானதை அடுத்து, அவர்கள் உயிரிழந்துள்ளனரென, வைத்தியசாலையின் எரிகாயப் பிரிவுக்கான ஒருங்கிணைப்பாளர் சமந்தா லால் சென் தெரிவித்ததுடன், உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## நபிகளாரின் கேலிச்சித்திர பதிப்புக்கு எதிர்ப்பு

பிரெஞ்சுச் சஞ்சிகையான சார்லி ஹெப்டோ, நபிகள் நாயகத்தை கேலிக்குள்ளாக்கும் கேலிச்சித்திரங்களை மீளப் பதிப்பித்தற்கு எதிராக, பாகிஸ்தான் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

பிரான்ஸ்

மாலியில்

## ‘இரண்டு பிரெஞ்சு படைவீரர்கள் கொலை’

நடவடிக்கையொன்றில் இருக்கும்போது, இரண்டு பிரெஞ்சுப் படைவீரர்கள் மாலியில், நேற்று முன்தினம், அவர்களின் கவச வாகனத்தை வெடிகுண்டொன்றை வைத்து அழித்தபோது கொல்லப்பட்டனரென, பிரெஞ்சு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அறிக்கையின்படி, வட மாலிப் பிராந்தியமான டெஸ்ஸலிட் பிராந்தியத்தில் இடம்பெற்ற குறித்த வெடிப்பில் மூன்றாவது படைவீரரொருவர் காயமடைந்துள்ளார்.

இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கெதிரான மாலியில் பிரான்ஸின் பர்க்கனே இராணுவ நடவடிக்கைகளின் அங்கமாக குறித்த படைவீரர்கள் காணப்படுகின்றனர்.



பிரித்தானியா

பேர்மிங்ஹாமில் கத்திக்குத்துகள்:

## ஒருவர் பலி; எழுவர் காயம்

### தேடப்படுகிறார் கொலையாளி

பிரித்தானியாவின் பேர்மிங்ஹாம் நகர மய்யத்தைச் சூழ இரண்டு மணித்தியால கத்திக்குத்தை நடத்தி ஒருவரைக் கொன்றதுடன், ஏழு பேரைக் காயப்படுத்திய நபர் இன்னும் தேடப்படுவதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை நேரப்படி, நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் கொன்ஸிடியூஷன் ஹில்லில் முதலாவது கத்திக்குத்து இடம்பெற்றதுடன், பின்னர் கொலையாளி தெற்காக நகர்ந்து எழுந்தமானமாக தாக்கியதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டதாக, குழு தொடர்பானதாக அல்லது மனநலம் பாதிக்கப்பட்டதாக கத்திக்குத்துகள் தோன்றவில்லை என, மேற்கு மிட்லான்ட்ஸ் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்நிலையில், தாங்கள் சந்தேகநபரைத் தேடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருவர் கொல்லப்பட்டதுடன், இன்னொரு ஆணும் பெண்ணொருவரும் மோசமான காயங்களுக்குள்ளானதுடன், மேலும் ஐவர் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களைக் கொண்டுள்ளனர் என நம்பப்படுகிறது.

லிவெரி வீதி, இர்விங் வீதி, இறுதியாக ஹேர்ஸ்ட் வீதியில் வைத்து மக்களை இறுதியாக இலங்கை நேரப்படி காலை 6.50 மணிக்கு கொலையாளி கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சில ஆயுதந்தரித்த அதிகாரிகள் உட்பட்டோர் பேர்மிங்ஹாம் நகரம் முழுவதும் காணப்படுகின்றனர்.




ஐ. அமெரிக்கா

## ட்ரம்ப் பேரணியில் படகுகள் மூழ்கின

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு ஆதரவான டெக்ஸாஸிலுள்ள நெருக்கடிமிக்க ட்ரெவிஸ் நதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படகுப் பேரணியொன்றானது அலைகளையும், நீரையும் கலங்கடிக்கச் செய்த நிலையில், குறைந்தது நான்கு படகுகள் மூழ்கியதுடன், ஏனையவை பாறையுடன் மோதினவென, உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்ததுடன், ஒருவரும் பாதிப்படையவில்லை எனக் கூறியுள்ளனர்.



படகுகள் அனைத்தும் ஒன்றாக நகர்ந்த நிலையிலேயே அவைஅலைகளை ஏற்படுத்தியதாக, ட்ரெவிஸ் கவுண்டி ஷெரிஃப் அலுவலகத்தின் பொதுத் தகவலதிகாரி கிறிஸ்டன் டார்க் தெரிவித்துள்ளார்.

# இருக்குமிடத்தில் இருப்பதே சிறப்பு...

இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே என்று சொல்வதன் அர்த்தத்தை இலங்கை அரசியலில் தற்போதெல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. குடும்ப ஆட்சி என்று சொல்பவர்களும், அண்ணன் - தம்பி பிரச்சினை என்று சொல்பவர்களும் வாயடைத்துப் போகுமளவுக்கு, அரசியல் காய் நகர்த்தல்கள் கனகச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகையதொரு நகர்வுதான் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம்.


அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாமலாக்குவதே பிரதான இலக்கென்பதை வெளிப்படையாகச் சொல்லியே இவ்வரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆகையால், 19ஐ இல்லாமலாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட 20ஆவது திருத்தம் என்பதை எவரும் ஆச்சரியமாகப் பார்க்கத் தேவையில்லை. இது ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். அப்படியிருக்கையில் அதனைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, குத்துதே குடையுதே என்று இப்போது சொல்வது, காலம் கடந்த ஞானம் தான். ஒருவருக்கு ஒரு பதவியைக் கொடுக்கமுன்னர் சிந்தித்துக் கொடுக்கவேண்டும். கொட்டத்தைக் கெடுப்பார் என்று தெரிந்துகொண்டே அவரிடம் அந்தப் பதவியைக் கொடுத்தால், அதற்கான விளைவுகளை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க வேண்டுமென்ற செயற்பாடுகள் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகியிருந்தன. அதை ஓரளவுக்கேனும் வெளிப்படையாக உணரக்கூடியதாகவும் இருந்தது. அப்போதெல்லாம் அதற்கு எதிராக எப்படிச் செயலாற்றுவதென்பதைத் திட்டமிடாமல் கோட்டைவிட்டுவிட்டு, இப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்காக எதிர்க்கட்சியினர் கொக்கரிப்பது வெட்கக்கேடானது. எவரும் இருக்குமிடத்தில் இருந்துகொண்டால், அவர்கள் செயல்களுக்கேற்றாற்போல் காய்களை நகர்த்தத் தெரிந்துகொள்ள வேண்டும். அத்தகைய நகர்வுகளை மேற்கொள்ளத் தவறின், விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக சில பொது அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் உயர்நீதிமன்றின் உதவியை நாடவுள்ளன. தேசிய பாதுகாப்பு, தேசியகொடி போன்ற மிக முக்கியமான விவகாரங்களை மாற்றுவதாக இருந்தால்தான் சர்வஜன வாக்கெடுப்பை செய்யவேண்டி ஏற்படலாம். அதைவிடுத்து, ஏனைய விடயங்களைத் திருத்துவதாக இருந்தால், அமைச்சரவை அனுமதியும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவும் போதுமானதாகவே இருக்கும். இந்நடைமுறையென்பது தற்போதைய அரசாங்கத்துக்குச் சாதகமானதாகவே இருக்கிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் மாற்றங்களை எதிர்காலத்தில் எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதுதொடர்பில் சிறுபான்மைக் கட்சிகள் திட்டங்களைத் தீட்டவேண்டும். அதைவிடுத்து, கட்சிதாவும் தூதுகளைக் காவித்திரிவது, சிறுபான்மை மக்களின் தரித்திரமன்றி வேறில்லை.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சாலையோரத்தில் பூத்துக்குலுங்கும் மரம், செடிகளை எத்தனைப் பேர் இரசிக்கின்றார்களோ தெரியாது. அவற்றை எவரும் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதுமில்லை.

அதுபோலவே சேரியில் ஏழ்மையின் பிடியில் உண்ண உணவு இன்றிச் சுற்றித் திரிவும் சிறார்களை, எத்தனை நபர்கள் ஏறெடுத்து நோக்குகின்றனர்?

நல்ல பராமரிப்பு இல்லாமல் வாழும் இவர்களைப் போஷிக்க முடியாத பெற்றோர்கள், எங்ஙனம் தக்க கல்வியைப் பெற்றுக்கொடுக்க வசதி செய்வார்களோ தெரியாது. திரைப்படத்தில் இத்தகைய காட்சிகளைப் பார்த்தால் மட்டும் கவலைப்படுவார்கள்.

அநேகமான பிள்ளைகள் பெற்றோர் இன்றியும் உணவுக்காவும் சின்னஞ் சிறு கைகளால் கையேந்தி நிற்பதைக் கண்டும் எத்தகைய உதவிகளை இந்த உலகம் செய்கின்றது?

பிள்ளைகள் நலன்பேணும் பொது அமைப்புகள், அநாதை ஆசிரமங்களால் முழுமையாக உதவிட முடியாது. அனைத்து மக்களும் பச்சைக் குழந்தைகள், பிள்ளைகளுக்காக உதவியே ஆக வேண்டும். இரக்கம் சுரக்கட்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அரசமைப்பு அரசியலும் தமிழ்த் தேசமும்



என்.கே.அஷோக்பரன்

“சிறந்ததை எதிர்பாருங்கள், பாரதுரமானதை எதிர்கொள்ளத் திட்டமிடுங்கள், வியப்படையத் தயாராக இருங்கள்” என்றார் பேச்சாளர் மற்றும் எழுத்தாளர் டெனிஸ் வெயிட்லி. இன்றைய சூழலில் சிறந்ததை எதிர்பார்க்க முடியாவிட்டாலும், பாரதுரமானதை எதிர்கொள்ளத் திட்டமிடவும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தாங்கிக்கொள்ளத் தயாராகவும் இருக்க வேண்டிய, சூழல் ஏற்பட்டுள்ளது என்பதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன.

சுதந்திர இலங்கையின் எந்தவோர் அரசியலமைப்பின் உருவாக்கத்திலும் தமிழ்த் தேசத்தின் பங்கு உள்வாங்கப்படவில்லை என்பதுதான், பட்டவர்த்தனமான உண்மை. சோல்பரி அரசியலமைப்பு என்பது பிரித்தானியர்கள் நீங்கள் சிறுபான்மையினர், உங்களுக்கு பிரிவு 29(2) தரும் பாதுகாப்பே போதுமானது என்று, தமிழ்த் தேசத்தின் கோரிக்கைகளுக்குப் பதிலாக, 29(2) என்ற எந்த விளைபயன்தராத அரசியலமைப்புச் சரத்துடன் நின்று கொண்டது. 1972இன் முதலாவது குடியரசு அரசியலமைப்புருவாக்கத்தின் போது, தமிழ்த் தேசத்தின் குரல்கள் பட்டவர்த்தனமாக நிராகரிக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாகப் பெரும்பான்மையினத் தேசியத்தின் அரசியலமைப்பாகவே பிறப்பெடுத்தது. 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு, ஜே.ஆரின் குழந்தை. முதலாவது குடியரசு யாப்பிலிருந்த பெரும்பான்மையினத் தேசியத்தின் நலன்களைப் பாதுகாக்கும் அத்தனையும் அதிலிருந்தன என்பதோடு, ஜே.ஆரின் அதிகாரங்களைப் பலப்படுத்தும் சர்வாதிகார ஜனாதிபதி முறையும், அதன்பாலான அதிகாரக்குவிப்பும் கொண்டதான, அரசியலமைப்பாக அது அமைந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், ராஜீவ் காந்தி அரசாங்கத்தினால், ஜே.ஆர். மீதான அழுத்தத்தின் விளைவாகத்தான், தமிழ் மொழியுரிமை, மாகாணசபைகள் உள்ளிட்டவை அரசியலமைப்புத் திருத்தங்களினூடாகக் கிடைத்தன. இவை தமிழ்த் தேசத்தின் அரசியல் அபிலாசைகளின் குறைந்தபட்சத்திலும் குறைந்தபட்சமானவை.

> 20ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதி கோட்டாபயவிடம் அதிகாரங்கள் குவிவது என்பது பெரும் பனிமலையின் முகடு மட்டும்தான். இனிவரவிருப்பதுதான் இலங்கை மக்களுக்கு, குறிப்பாக தமிழ்த் தேசம் மற்றும் சிறுபான்மையினருக்கு பெரும் சவாலாக அமையக்கூடிய விடயம். அதுதான் புதிய அரசமைப்பு

அரசியலமைப்பின் உருவாக்கம் தொடர்பில் ஃப்ரெஞ்ச் மொழியில் “pouvoir constituant” என்று ஒரு கோட்பாட்டுப் பதமுண்டு. அதன் அர்த்தம், அரசியலமைப்பு ஒழுங்கை ஸ்தாபிக்கும், அதிகாரம் என்பதாகும். சுருங்கக்கூறின் கோட்பாட்டு ரீதியாகப் பார்ப்பின் அரசியலமைப்பே ஒரு நாட்டின் அதியுயர் அதிகாரத்தின் வெளிப்பாடாக இருக்கும் போது, அதனையும் தாண்டிய, அந்த அரசியலமைப்பை உருவாக்கும் பலம்தான் “pouvoir constituant” என்று விளிக்கப்படுகிறது. இலங்கை அரசியலமைப்பின் முன்னுரை இந்த “pouvoir constituant” ஆக இலங்கை மக்களைக் குறிப்பிடுகிறது. ஆனால், யதார்த்தத்தில் சுதந்திர இலங்கையின் எந்தவோர் அரசியலமைப்பும் தமிழ் மக்களின், ஆமோதிப்புடன் நிறைவேற்றப்படவில்லை என்பதைவிட, அதனை ஆக்கும் பணியில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின், ஊடாக வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் அபிலாசைகள் உள்ளடக்கப்படவில்லை. ஆக இலங்கையின் “pouvoir const ituant”இன் ஒரு பகுதி இந்த இந்த அரசியலமைப்புகளை ஆக்கவில்லை. ஆனால் இப்படிக் கூறுவதில் பல கோட்பாட்டுச் சிக்கல்கள் உள்ளன. “மக்கள்” என்பது ஒன்று, அதற்குள் பகுதிகள் இருக்க முடியாது என்பது மரபுரீதியான கோட்பாட்டுப் பார்வையாகும். ஃப்ரான்ஸின் சிவில் தேசம், பிராந்திய அடையாளங்களைக் கடந்த “ஃப்ரெஞ்ச்” தேசமெனும் “சிவில் தேச” அடையாளத்தைக் கட்டியெழுப்பியதன்படி, “மக்கள்” என்பது, ஒன்று என்பது பிரச்சினைக்குரியதற்றதொன்றாகிறது. ஆனால், இனத்-தேசியத்தின்படி பிரிவடைந்துள்ள, குறைந்தபட்சம் இரண்டு இனத்-தேசங்களைக்கொண்டுள்ள நாட்டை, ஒற்றைச் சிவில் தேசத்தைக் கட்டியமைத்துள்ள ஃபிரான்ஸுடன் நேரடியாக ஒப்பிடுவது சிக்கலானது. ஆகவே, கோட்பாட்டு ரீதியில் இந்த வேறுபாட்டினை உள்வாங்கிக்கொள்வது அவசியமாகிறது. நிற்க.

வர்த்தமானியில், பிரசுரிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான 20வது திருத்த மசோதாவைப் பொறுத்தவரையில், அது “ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர அனைத்தையும் செய்யக்கூடிய,ஜே. ஆர் உருவாக்கிய சர்வாதிகாரமிக்க ஜனாதிபதியாக கோட்டாபயவை மாற்றும் மசோதாவாக இருப்பது வெள்ளிடைமலை. இதை நாம் எதிர்பார்க்கவில்லை; என்று யாராவது வியப்படைந்தால், அவர்களுக்கு இலங்கை அரசியல் தெரியவில்லை என்று அர்த்தம். இந்த நாட்டின் வாக்காளர்கள் 2/3 பெரும்பான்மை வாரி வழங்கிவிட்டபின்னர், அதனை தமது அதிகாரத்தைத் தக்க வைக்க ஆட்சிபீடத்திலுள்ளோர் பயன்படுத்த மாட்டார்கள் என்று எண்ணுவதில் அர்த்தமில்லை. ஜனாதிபதி கோட்டாபயவிடம் அதிகாரம் குவிவதன் அரசியல் விளைவுகளை, அதன் பயனாக உருவாகக்கூடிய உட்கட்சி முறுகல்களை, ராஜபக்ஷ குடும்பத்தினுள், எழக்கூடிய முரண்பாடுகளைப் பற்றியெல்லாம் ஆருடங்கள் ஆயிரம் உரைக்கலாம். அவை, கிளர்ச்சியுண்டாக்கும் அரசியல் கட்டுரைகளாகக் கூட அமையும். ஆனால், அவற்றின் அரசியல்ரீதியிலான முக்கியத்துவம் என்பது மிகக் குறைவானது. எந்த வகையிலான முறுகலும் ராஜபக்ஷ தரப்பினைக் குறைந்தபட்சம், அடுத்த ஐந்து வருடங்களுக்கு உடைக்கப்போவதில்லை. அவர்களுக்குள் உள்ள எந்த முரண்பாடும் ராஜபக்ஷ குடும்பத்தின் வீட்டுவாசலைக் கடந்து சந்திக்கு வரப்போவதுமில்லை. ராஜபக்ஷக்களின் பலம் என்பது அவர்களின் குடும்பம்தான். அதனை ராஜபக்ஷக்கள் மிக நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள். 20ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதி கோட்டாபயவிடம் அதிகாரங்கள் குவிவது என்பது பெரும் பனிமலையின் முகடு மட்டும்தான். இனிவரவிருப்பதுதான் இலங்கை மக்களுக்கு, குறிப்பாக தமிழ்த் தேசம் மற்றும் சிறுபான்மையினருக்கு பெரும் சவாலாக அமையக்கூடிய விடயம். அதுதான் புதிய அரசமைப்பு.

புதிய அரசமைப்பு என்பது, “சிங்கள-பௌத்த” தேசியத்தின் நலன்காக்கும் அரசமைப்பாக மட்டுமன்றி, அதன் நலன்களை முன்னிறுத்தும் அரசமைப்பாக இருக்கும் என்பது திண்ணம். இந்த முறை வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்கள் ஆளும் மொட்டுக்கட்சிக்கும் (கிழக்கில்), அதன் ஆதரவு மற்றும் நேச சக்திகளுக்கும் (வடக்கில்) வாரி வழங்கிய குறிப்பிடத்தக்களவிலான வாக்குகள், அதன் மூலம் அந்தத் தமிழ்ப் பிரதிநிதிகள் இந்த “புதிய அரசமைப்புக்கு” வழங்கப்போகும் ஆதரவு, தமிழ் மக்கள் இந்தப் புதிய அரசமைப்புக்கு வழங்கிய அங்கிகாரமாக, பொருள்கோடல் செய்யப்படும் என்பதும் நிச்சயம். இதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். 2015-2020 வரை “நல்லாட்சி அரசாங்கத்தின்” பங்குதாரியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இருந்தது என்பது வெள்ளிடைமலை. இந்தக் காலப்பகுதியில் வடக்கு-கிழக்கின் பொருளாதாரம் பற்றி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பற்றி இம்மியளவேனும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு யோசித்து, அதற்குரிய தீர்வுகளை நடைமுறைப்படுத்தியிருக்குமேயானால், வேலைவாய்ப்பு வேண்டித் தமது வாக்குகளை அடகுவைக்க வேண்டிய தேவை, தமிழ் மக்களுக்கு வந்திருக்காது. தேசியத்தை வாய்ச்சொல்லால் மட்டும் விற்றுப்பிழைத்துவிடலாம் என்ற கிழட்டுச் சிந்தனையை தமிழ் மக்கள் நிராகரிக்கத் தொடங்கிவிட்டதன் பட்டவர்த்தனமான சமிக்ஞை இது. ஆனால், இதன் விளைவுகூட தமிழ் மக்களை எதிர்மறையாகப் பாதிக்கத்தான் போகிறது.

13ஆம் திருத்தம் இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்ற தீவிர “சிங்கள-பௌத்த” தேசியவாதிகளின் முப்பதாண்டுகளுக்கும் மேலான, அவா தற்போது நிறைவேறக்கூடிய வாய்ப்பு தென்படுகிறது. இந்தியா என்பது அதற்கான பெரும் முட்டுக்கட்டை. ஆனால், ராஜீவ் காந்தியின் 13ஆம் திருத்தத்தைப் பாதுகாக்க நரேந்திர மோடி தலைமையிலான பி.ஜே.பி அரசாங்கம் எவ்வளவு அக்கறை காட்டும் என்பது முக்கியக் கேள்வி. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இன்னமும் தெற்காசியாவின் பெரியண்ணன் என்ற சிந்தனையின் தொடர்கிறதா என்பது அடுத்த கேள்வி. பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ், இன்று நேபாளம் என அயல்நாடுகள் அனைத்துடனும் முறுகல் நிலையைச் சந்தித்து வரும் இந்தியாவுக்கு, இன்னோர் அயல் நாடுடன் முறுகலில் ஈடுபடும் சக்தி இருக்கிறதா என்பது முக்கியமான கேள்வி. மறுபுறத்தில் இந்திய நலன்கள் தொடர்பில் ராஜபக்ஷ அரசாங்கம் கவனத்துடன் நடந்துகொள்ளும்வரை, தமிழ் மக்கள் பற்றி இந்தியா ஏன் கவலைப்பட வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை என்பது, இந்தியா இலங்கையில் தலையிடுவதற்கும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்குமான ஒரு துருப்புச் சீட்டு. அவ்வளவுதான். அதற்குத் தமிழ் மக்கள் மீதான கரிசனை, அக்கறை, மனிதாபிமானம் என, ஆயிரம் அலங்கார வார்த்தைகள் கொண்டு யாரும் அழகுசேர்த்துச் சொல்லலாம். ஆனால் அப்பட்டமான உண்மை யாதெனில், இந்தியாவின் அத்தனை நகர்வுகளும் இந்திய நலன் சார்ந்தது, மட்டுமேயன்றி வேறில்லை. ஆகவே, இன்றைய சூழலில் 13ஐத் தக்க வைத்துக்கொள்ள இந்தியா எவ்வளவு தூரம் அழுத்தம் கொடுக்கும் என்பது ஐயத்துக்குரியதே. 13ஆம் திருத்தமும் மாகாணசபைகளும் போய்விட்டால், தமிழ்த் தேசத்தின் அரசியல் நிலை என்ன?

(தொடரும்)

## கடிதங்கள்

### பிரதான வீதி, புனரமைக்காமையால் மக்கள் அவதி

கிளிநொச்சி - பிரமந்தனாறு, கொழுந்துப்புலவு கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமையால், அப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு பிரசேதத்துக்குட்பட்ட கொழுந்துப்புலவு கிராமத்துக்கான பிரதான வீதியாகக் காணப்படும் பிரமந்தனாறு - தேராவில் வீதி, இதுவரை புனரமைக்கப்படாத நிலையில், குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால், மழை காலங்களில், மேற்படி வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், மேற்படி வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால், அக்கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், பல்வேறு தேவைகள் கருதி வெளியிடங்களுக்குச் செல்லும் வயோதிபர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை அன்றாடம் எதிர்நோக்கி வருகின்றனர்.


இந்நிலையில், மேற்படி வீதியின் 3.5 கிலோமீற்றர் நீளமான பகுதி ஆளுநர் நிதியத்தின் நிதி மூலம் கரைச்சிப் பிரதேச சபையால் புனரமைக்கப்படவுள்ளதாக, கரைச்சிப்பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டு உள்ளது.


ஏனைய பகுதியையும் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

-சுப்ரமணியம் பாஸ்கரன்

## வாராந்த பங்கு சந்தை நிலைவரம்






**31.08.2020 -04.09.2020**

**31.08.2020**

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், காகில்ஸ் மற்றும் வலிபல் வன் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் அபவிசுட்டி நேர் பெறுமதியையும், S&P SL20 சுட்டி மறைப் பெறுமதியையும் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு DFCC வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு றோயல் செரமிக்ஸ், பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங், சென்ரல் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் கேபள்ஸ் போன்றவற்றின் மீது பதிவாகியிருந்தன. மேலும், வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் அதிகளவு ஈடுபட்டனர்.

**01.09.2020**

பினர முழுமதி தின விடுமுறையை முன்னிட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

**02.09.2020**

காசன் கம்பர்பட்ச், பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் சிலோன் டொபாக்கோ கம்பனி ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் அபவி சுட்டி நேர் பெறுமதியை பதிவு செய்திருந்ததுடன், S&P SL20 சுட்டி மறைப் பெறுமதியை பதிவு செய்திருந்தது. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், டயலொக் மற்றும் விதுல்லங்கா ஆகிய பங்குகள் மீது சந்திப்புகள் பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ், ACL கேபிள்ஸ் மற்றும் சம்பத் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் அதிகளவு ஈடுபட்டனர்.

**03.09.2020**

செலிங்கோ இன்சூரன்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் ஆகியவற்றின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் சென்ரல் இன்டஸ்ட்ரீஸ் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ், DFCC வங்கி மற்றும் ACL கேபிள்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் டீஜே லங்கா பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

**04.09.2020**

காசன் கம்பர்பட்ச், சிலோன் டொபாக்கோ கம்பனி மற்றும் லயன் பிரெவரி ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.0 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு லயன் பிரெவரி சிலோன், கொமர்ஷல் வங்கி, மெல்ஸ்டாகோர்ப் மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ், DFCC வங்கி மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு ரோயல் செரமிக்ஸ், சொஃப்ட்லொஜிக் லைஃவ் இன்சூரன்ஸ் மற்றும் சென்ரல் இன்டஸ்ட்ரீஸ் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

வாரத்தில் அபவிசு 0.18% சரிவையும் S&P SL20 1.64% சரிவையும் பதிவு செய்திருந்ததுடன், சராசரி தினசரி புரள்வு 1.3 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது.



**அநுதினன் சுதந்திரநாதன்**

# அதிகரிக்கும் கடனும் நமது எதிர்காலமும்

இலங்கையின் தேர்தல் காலம் முடிந்துவிட்டது. கொரோனாவின் செயற்பாடுகளும் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. தற்போது மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இயல்புநிலைக்குத் திரும்ப ஆரம்பித்து இருக்கிறார்கள். இப்போதுதான், கடந்த 6 மாதகாலங்களில் இலங்கையின் பொருளாதார ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் பரபரப்பாகப் பேச ஆரம்பித்து இருக்கிறார்கள். கொரோனாக் காலத்தில் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட முடிவுகள், பண அச்சிடல், மத்திய வங்கியை அழுத்தத்துக்குள்ளாக்கி,முடிவுகளை எடுக்கவைத்தமை தொடர்பில், உள்ள தீவிரத்தன்மை பற்றித் தொடர்ச்சியாக எங்கள் பத்திகளில் நாம் அறிவுறுத்தி வந்தநிலையில், அதன் உண்மை நிலையை தற்போதுதான் மக்கள் உணரத் தொடங்கி இருக்கிறார்கள்.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த 2015ஆம் ஆண்டிலேயே, 2019-2021ஆம் ஆண்டு காலப்பகுதிதான் இலங்கை அதிகளவிலான பழைய கடன்களை, மீளச் செலுத்த வேண்டிய காலமாக இருக்கிறது எனக் கணிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில்தான், மங்கள சமரவீர, நிதி அமைச்சராக வந்தபோது, 2020ஆம் ஆண்டை அடிப்படையாகக்கொண்டு, நிதியியல் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தார். ஆனால், நல்லாட்சி உறவில், ஏற்பட்ட விரிசல் காரணமாக, அந்த நிதியியல் இலக்குகள் அடையப்படிருக்கவில்லை. இந்த நிலையில்தான், 2019ஆம் ஆண்டின் மத்திய பகுதியிலிருந்து, தேர்தலுக்கான தீவிரம் அதிகரித்திருந்தது.

தேர்தலின் காரணமாகவும், 2020ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்த, கொரோனா காரணமாகவும் இந்த கடன்கள் தொடர்பிலும், நமது பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் நாம் சிந்திக்கத் தவறியிருந்தோம். தற்போது, இயல்பு நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்புகின்ற நிலையில், உண்மை உறைக்கத் தொடங்கியிருக்கிறது.

> **கடந்த 6 மாதத்தில், இலங்கையின், புதிய அரசு அதிகரித்திருக்கும் கடன் தொகையின் அளவு மாத்திரம் 1,000 பில்லியன் ரூபாய்களைத் தாண்டுகிறது. வெறும் 6 மாதத்தில், கொரோனாவின் போர்வையில் நாம் வாங்கியிருக்கும் கடன்கள், என அரசாங்கம் கூறிக்கொண்டாலும், இது நம்மவர்களின் வினைத்திறனற்ற முகாமைத்துவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது**

இலங்கை மத்திய வங்கியினால், வாராந்தம் வெளியிடப்படும் பொருளாதார அறிக்கையில் கடந்த வாரம் வெளியான அறிக்கையே மீண்டும் கடன்கள் தொடர்பிலான பேச்சுகள் அதிகரிக்க, காரணமாகி இருக்கின்றன. காரணம், 2020ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுடன் சேர்த்து, இலங்கை மத்திய வங்கி, செலுத்த வேண்டிய ஒட்டுமொத்தக் கடனின் தொகை 14,052 பில்லியனை எட்டியிருக்கிறது. இதுவொன்றும் ஆச்சரியமல்ல. இதற்கு அடுத்து வருகின்ற செய்திகள்தான் ஆச்சரியமானவை.

இந்த அறிக்கையிலேயே 2019ஆம் ஆண்டின் இறுதிவரை, மத்திய வங்கி செலுத்த வேண்டிய, கடனின் அளவு 13,013.5 பில்லியன் ஆக இருந்ததென சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. அதன் பிரகாரம் பார்ப்பின், கடந்த 6 மாதத்தில், இலங்கையின், புதிய அரசு அதிகரித்திருக்கும் கடன் தொகையின் அளவு மாத்திரம் 1,000 பில்லியன் ரூபாய்களைத் தாண்டுகிறது. வெறும் 6 மாதத்தில், கொரோனாவின் போர்வையில் நாம் வாங்கியிருக்கும் கடன்கள், என அரசாங்கம் கூறிக்கொண்டாலும், இது நம்மவர்களின் வினைத்திறனற்ற முகாமைத்துவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக கடந்த ஏப்ரல் மாதத்தில் கடனின் எல்லையானது 14,000 பில்லியன் ரூபாயைத் தாண்டியிருந்தது. ஆனால், கடந்த மே மாதத்தில் செய்யப்பட்ட சில மீள்கொடுப்பனவுகள் மூலமாக இந்தத் தொகை 13,895.9 பில்லியனாகக் குறைக்கப்பட்டியிருந்தது. ஆனாலும், அதற்கு அடுத்த மாதத்திலிருந்தே இலங்கை அரசு பழையபடி கடன்களை வாங்கி குவிக்க இந்த தொகையானது மீண்டும் 14,000 பில்லியன் ரூபாய்களை சாதாரணமாகத் தாண்டியிருக்கிறது.

இந்த ஒட்டுமொத்த கடனின் அளவை இன்னமும் விரிவாகப் பார்க்கவேண்டியது அவசியமானதாக இருக்கிறது. இந்த ஒட்டுமொத்த கடனானது, இரண்டுவகையான, முக்கியமான உபபிரிவுகளைக் கொண்டதாக இருக்கிறது. ஒன்று உள்நாட்டுக் கடன் மற்றையது வெளிநாட்டுக் கடன். இதன் பிரகாரம், இலங்கையின் உள்நாட்டுக் கடன் 2019ஆம் ஆண்டின் இறுதியில் 6,629.1 பில்லியனாகவிருந்து, 2020ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் இறுதியில் 7,530.8 பில்லியனாக அதிகரித்து இருக்கிறது. அதுபோல, வெளிநாட்டுக் கடன் 2019ஆம் ஆண்டின் இறுதியில், 6,402.4 பில்லியன் ரூபாயிலிருந்து 2020ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் இறுதியில் 6,521.4 பில்லியன் ரூபாயாக மாற்றமடைந்து இருந்தது.



உள்நாட்டுக் கடனில் மிகப்பெரும் அளவு இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறி, கடனாக இருக்கிறது. காரணம், நாட்டுக்குத் தேவையான நிதித் தேவை ஏற்படுகின்றபோது, மத்திய வங்கி, திறைசேரி முறிகளை அச்சிட்டு வெளியிடும். இதனை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்வதன் மூலமாக, அரசுக்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், கடந்த பல மாதங்களாக இலங்கை அரசுக்கு நிதித் தேவை மிக அதிகமாக இருக்கிறது. ஆனால், இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய இலங்கை அரசு வெளியீடு செய்கின்ற திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யப் போதுமான முதலீட்டாளர்கள் இல்லை. எனவே, நாட்டில் மிகப்பெரும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு, கொரோனா காலத்தில் மிகப்பெரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாயிருந்தன. இந்த நிலையைத் தவிர்க்க, இலங்கை மத்திய வங்கி, அரசின் திறைசேரி முறிகளைத் தானே கொள்வனவு செய்யத் தொடங்கியது. இங்கு உங்கள் எல்லோருக்கும் ஒரு கேள்வி வரலாம். ஒரு நாட்டின் மிக முக்கியமான வங்கியாக இருக்கின்ற, மத்திய வங்கியில், இவ்வளவு நிதியிருக்குமாயின், அதனை நேரடியாக அரசுக்கு வழங்கலாமே ? எதற்கு, திறைசேரி முறையை வாங்கிக்கொண்டு, கடன் அடிப்படையில் கொடுக்க வேண்டும் ?

உண்மையில், அதற்கான காரணம் மிக எளிமையானது. உண்மையில், இலங்கை மத்திய வங்கியிலும் கூட, இந்தத் திறைசேரி முறிகளை வாங்கவும், ஜனாதிபதி அழுத்தம் கொடுத்த, கடன்களை வழங்கவும் நிதி இல்லை. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஒவ்வொரு முறையும், கடன் வழங்க, திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய, புதிய இலங்கை ரூபாய்களை பணமாக அச்சிடுகிறார்கள். இதன் மூலமாகவே, அரசின் நிதி தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். இதன்போது ஏற்படுகின்ற பாதகமானது. நேரடியாக சாதாரண பொது மக்களைப் பாதிக்கும் என்பதை நாம் அறிவோமா ? அதையும் எளிமையாகச் சொல்லலாம்.

இலங்கை மத்திய வங்கி, இப்படி தொடர்ச்சியாக இலங்கை ரூபாயை அச்சிட்டுக் கொண்டிருப்பின், ஒரு கட்டத்தில் இந்த இலங்கை ரூபாயின் கொடுக்கல் வாங்கல் அளவு அதிகரித்து, அதற்கான மதிப்புக் குறையத் தொடங்கும். சர்வதேச அளவில் இந்த நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி நேரடியாகவோ, மறைமுகமாகவோ பண வீக்கத்தின் மூலமாக பொருள்கள், சேவைகளின் விலை அதிகரிப்பின் மூலமாக நம்மையே வந்து தாக்கும். இதனைத் தவிர்க்க, இலங்கை மத்திய வங்கி, தாங்கள் கொள்வனவு செய்து வைத்திருக்குத் திறைசேரி முறிகளை எதிர்காலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்வார்கள் என எதிர்பார்க்கிறார்கள். இதன்மூலமாக, இலங்கை ரூபாய்க்கு சமமான வெளிநாட்டு நாணயங்களை இலங்கை அரசு கொண்டிருக்கும். இதன் விளைவாக, பணத்தின் பெறுமதியை நிலையாக பேண முடியும். ஆனால், இதுவோர் எதிர்பார்ப்பு மட்டுமே. உலகளாவிய ரீதியில், கொரோனாவின் தாக்கம் உள்ளநிலையில், பொருளாதார மந்தநிலையானது எதிர்வரும் 2021ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர வாய்ப்புள்ளதாக அறிவிக்கபட்டிருக்கிறது. இதன் விளைவாக, மிகப்பெரும் வெளிநாட்டு முதலீடுகளை நாம் இலங்கையில் எதிர்பார்ப்பது மிகக் கடினமான ஒன்றாக இருக்கிறது. அப்படியாயின், நான் மேலே சொன்னதுபோல நாட்டின் தலைமைகள் எடுத்த அலட்சியமான, தீர்மானங்களின் விலையை நமது அன்றாட வாழ்வில், ஒரு சுமையாக நாம் தாங்க வேண்டியதாக இருக்கும். அதற்கான அறிகுறிகள் ஆரம்பித்தே இருக்கிறது. இந்த பத்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள் இந்த வாரத்தில், நீங்கள், கொள்வனவு செய்த எத்தனை பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் விலையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பை எண்ணிப் பாருங்கள். சில இடங்களில் முட்டையின் விலை 30 ரூபாயை எட்டியிருக்கிறது. அத்தியாவசிய பொருள்களுக்கான உச்ச விலை வரம்பு கடைப்பிடிக்கப்படாமல் சீனியின் விலை கிலோகிராம் ஒன்றுக்கு 140 ரூபாயை தாண்டி சென்று கொண்டிருக்கிறது இவை அனைத்துமே ஓர் ஆரம்ப அறிகுறிகளே..!

> **உண்மையில், அதற்கான காரணம் மிக எளிமையானது. உண்மையில், இலங்கை மத்திய வங்கியிலும் கூட, இந்தத் திறைசேரி முறிகளை வாங்கவும், ஜனாதிபதி அழுத்தம் கொடுத்த, கடன்களை வழங்கவும் நிதி இல்லை. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஒவ்வொரு முறையும், கடன் வழங்க, திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய, புதிய இலங்கை ரூபாய்களை பணமாக அச்சிடுகிறார்கள்**

இந்த இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து அரச தலைமைகள் மிக விரைவாக செயற்படாமல் விடின், பொருளாதார ரீதியான பல்வேறு தாக்கங்களுக்கு நாம் தயாராக இருக்கவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. எதிர்வரும் வாரங்களில் 20ஆவது திருத்த சட்டம் மக்களின் பேசுபொருளாத இருக்கப்போகின்ற நிலையில், நமது பொருளாதார பிரச்சினைகள் தொடர்பிலும் மறந்து விடாமல் இருப்பதே நன்று.

# தோல்விகளுடன் ஆண்டு நிறைவுகளை நினைவுகூரும் ஐ.தே.க, சு.க

## ஐ.தே.க தனது 74ஆவது ஆண்டு நிறைவை, இம்மாதம் ஆறாம் திகதி நினைவுகூர்ந்ததுடன், சு.க தனது 69ஆவது ஆண்டு நிறைவை இம்மாதம் இரண்டாம் திகதி நினைவுகூர்ந்தது.

கடந்த 70 ஆண்டுகளில் இரண்டு பிரதான, பழைய தேசியக் கட்சிகளான ஐ.தே.க, சு.க நாட்டை தனிக்கட்சிகளாகவோ அல்லது கூட்டணியின் தலைமைப் பங்காளர்களாகவோ ஆட்சி செய்துள்ளன. அண்மைய தேர்தல்களில் 74 ஆண்டுகள் பழமையான ஐ.தே.க, நாடாளுமன்றத்தில் ஆசனம் ஒன்றை வெல்லத் தவறியதுடன், ஒரு தேசிய பட்டியல் ஆசனமொன்றை மட்டும் பெற்று நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சியாகியுள்ளது. 69 ஆண்டுகள் பழைமையான சு.க, அரசாங்கத்தில் சிறுபான்மைப் பங்காளராக மாறி புதிய நாடாளுமன்றத்தில் 15 சு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் மாற்று தேசியக் கட்சி நிலை முடிவுக்கு வழிகோலியுள்ளது.



ஐக்கிய தேசிய கட்சியானது (ஐ.தே.க), இலங்கையிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றாகும் என்பதுடன், இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவால் 1946ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆறாம் திகதி நிறுவப்பட்டது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, தனது அமைச்சரவைப் பொறுப்பு, சபையின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்து ஐ.தே.க அரசாங்கத்திலிருந்து, 1951ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி விலகினார். 1951ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (சு.க), கொழும்பு நகர மண்டபத்தில் நிறுவப்பட்டது. புதிய கட்சியின் தலைவராக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டார்.



கட்சி தலைமைத்துவம்

### ஐ.தே.க

**பொதுத் தேர்தல் 1947**
முதலாவது நாடாளுமன்றத் தேர்தல்கள் 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் நடைபெற்றது. தேர்தல்களில் ஐ.தே.க பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது. முதலாவது பிரதமராக டி.எஸ். சேனநாயக்க பதவியேற்றார்.

**பொதுத் தேர்தல் 1952**
1952ஆம் ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று ஐ.தே.க வென்றது. பிரதமராக டட்லி சேனநாயக்க நியமிக்கப்பட்டார்.

**பொதுத் தேர்தல் 1956**
1956ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐ.தே.க தோல்வியடைந்தது.

**பொதுத் தேர்தல் 1960**
1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐ.தே.க வென்றது. நான்கு மாதங்களுக்கு மட்டுமே ஆட்சியில் இருந்தது. தொடர்ந்து 1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சு.க அரசாங்கத்தை அமைத்தது.

**பொதுத் தேர்தல் 1965**
1965ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐ.தே.க வென்றது. டட்லி பிரதமராக தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது.

**பொதுத் தேர்தல் 1970**
1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.க பாரிய தோல்வியைச் சந்தித்தது. சு.கவும், அதன் புதிதாக அமைக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகள் கூட்டணியும் வென்றன. எதிர்க்கட்சித் தலைவராக ஜே.ஆர் ஜெயவர்தன பதவியேற்றார்.

**பொதுத் தேர்தல் 1977**
ஜூலை 21ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று 168 ஆசனங்களில் 140 ஆசனங்களை வென்று பாரிய வெற்றி ஒன்றை ஐ.தே.க பெற்றது. பிரதமராக ஜே.ஆர். ஜெயவர்தன 1977ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி அரசாங்கத்தை அமைத்தார்.

**பொதுத் தேர்தல் 1989**
1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.க ஆட்சிக்குத் திரும்பியது.

**பொதுத் தேர்தல் 1994**
1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் ஐ.தே.க தோற்கடிக்கப்பட்டதுடன், காமினி திஸாநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**பொதுத் தேர்தல் 2000**
2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் ஐ.தே.க தோல்வியடைந்தது. ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**பொதுத் தேர்தல் 2001**
2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஐ.தே.க வென்றது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஐ.தே.க அரசாங்கத்தை அமைத்தது.

**பொதுத் தேர்தல் 2004**
2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.க மீண்டும் தோல்வியடைந்தது. ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**பொதுத் தேர்தல் 2010**
2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க தோல்வியடைந்தது.

**பொதுத் தேர்தல் 2015**
ஓகஸ்ட் மாதத்தில் பொதுத் தேர்தலில் ஐ.தே.கவால் தலைமையிலான கூட்டணி தேர்தலை வென்றது. தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சு.கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஐ.தே.க கைச்சாத்திட்டது. ஐ.ம.சு.கூட்டணியில் நா.உறுப்பினர்கள் 45 பேர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

ஐ.தே.க நா.உ.கள்: 1947 – 42; 1952 – 54; 1956 – 8; 1960 – 50; 1960 – 30; 1965 – 66; 1970 – 17 MPs; 1977 – 140; 1989 – 125; 1994 – 94; 2000 – 89; 2001 – 109; 2004 – 82; 2010 – 60; 2015 – 106; 2020 – 54 / 1

### கட்சி தலைமைத்துவம்

டி.எஸ். சேனநாயக்க 1947-52
எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 1951-1959
டட்லி சேனநாயக்க 1952-53
சி.பி. டி சில்வா 1959-1960
சேர் ஜோன் கொத்தலாவ 1953-56
டட்லி சேனநாயக்க 1956-73
ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1960 - 2000
ஜெ.ஆர். ஜெயவர்தன 1973-88
ஆர். பிரேமதாஸ 1988-93
டி.பி. விஜேதுங்க 1993-94
26 ஆண்டுகள்
ரணில் விக்கிரமசிங்க 1994 – தற்போது வரை
சந்திரிகா குமாரதுங்க 2000 - 2005
மஹிந்த ராஜபக்ஷ 2005 - 2015
மைத்திரிபால சிறிசேன 2015 – தற்போது வரை

2015ஆம் ஆண்டு ஜனாதிபதிப் பதவியை சு.கவிலிருந்து பிரிந்து சென்ற, ஐ.தே.க மற்றும் ஏனைய சிறிய கட்சிகளின் ஆதரவுடன் தனக்கு எதிராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிடம் மஹிந்த ராஜபக்ஷ இழந்தார். நாடாளுமன்றத்தில் ஐ.ம.சு.கூட்டணி பெரும்பான்மையைக் கொண்டிருந்தபோதும் ஐ.தே.க ஆட்சியைப் பெற்றது. சிறிசேனவின் வெற்றியை அடுத்து கட்சியின் தலைமைத்துவத்தை மைத்திரிபால சிறிசேனவிடம் மஹிந்த ராஜபக்ஷ கையளித்தார்.

### சு.க

**1952 பொதுத் தேர்தல்**
1952ஆம் ஆண்டு சு.க, தேர்தலில் முதல் முறையாக போட்டியிட்டது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1956 பொதுத் தேர்தல்**
1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மஹாஜன எக்சத் பெரமுன, சு.க ஒன்றிணைந்து ஐ.தே.கவை முதன்முறையாக தோற்கடித்தது. நான்காவது பிரதமராக ஏப்ரல் மாதத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பதவியேற்றார்.

**1960 பொதுத் தேர்தல்**
1960ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெற்றதுடன், ஐ.தே.கவால் சுக தோற்கடிக்கப்பட்டது. சி.பி டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவரானார்.

1960ஆம் ஆண்டு ஜூலை மாத பொதுத் தேர்தலில் மாக்ஸிஸ்ட் கட்சிகளுடனான கூட்டணியொன்றில் சு.க வென்றதுடன், ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க உலகின் முதலாவது பெண் பிரதமரானார்.

**1965 பொதுத் தேர்தல்**
சு.க தோற்கடிக்கப்பட்டது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1970 பொதுத் தேர்தல்**
சு.க கூட்டணி பெரும்பான்மையைப் பெற்றதுடன், சு.கவின் தலைவர் ஸ்ரீ மாவோ பிரதமராக பதவியேற்றார்.

**1977 பொதுத் தேர்தல்**
ஐ.தே.கவால் சு.க தோற்கடிக்கப்பட்டதுடன், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1989 பொதுத் தேர்தல்**
ஆளும் ஐ.தே.கவா சு.க தோற்கடிக்கப்பட்டதுடன், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1994 பொதுத் தேர்தல்**
மக்களின் கூட்டணியின் பிரதான கட்சியான சு.க, 17 ஆண்டுகளில் முதற்தடவையாக 1994ஆம் ஆண்டு ஆட்சிக்குத் திரும்பியது. சந்திரிகா குமாரதுங்க, பிரதமராகப் பதவியேற்றார்.

**2000 பொதுத் தேர்தல்**
2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆளும் மக்களின் கூட்டணி வென்றது.

**2001 பொதுத் தேர்தல்**
2001ஆம் ஆண்டு டிசெம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆட்சியிலிருந்த மக்களின் கூட்டணியானது ஐ.தே.க தலைமையிலான கூட்டணியால் தோற்கடிக்கப்பட்டது.

**2004 பொதுத் தேர்தல்**
சு.கவும், ஜே.வி.பியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை அமைத்தது. 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஆளும் ஐ.தே.க தோற்கடிக்கப்பட்டது.

**2010 பொதுத் தேர்தல்**
ஏப்ரல் மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஐ.ம.சு.கூ பாரிய வெற்றியொன்றைப் பெற்றது.

**2015 பொதுத் தேர்தல்**
ஐ.தே.க பொதுத் தேர்தலில் வென்றது. ஐ.ம.சு.கூட்டணியின் நா.உ.கள் 45 பேர் ஐ.தே.க அரசாங்கத்துடன் இணைந்ததுடன், மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 50 நா.உ.கள் எதிர்க்கட்சியில் இருந்ததுடன், சு.க பிளவை எதிர்நோக்கியிருந்தது.

சு.க நா.உ.கள்: 1952 – 9; 1956 – 51; 1960 – 46; 1960 – 75; 1965 – 41; 1970 – 91; 1977 – 8; 1989 – 67; 1994 – 105; 2000 – 107; 2001 – 77; 2004 – 105; 2010 – 144; 2015 – 95; 2020 – 15 + 130

2018ஆம் ஆண்டு நவம்பரில் சு.கவின் முன்னாள் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் (பெரமுன) இணைந்துகொண்டார். பின்னர் அவர் பெரமுனவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரின் தந்தை, 1951ஆம் ஆண்டு சு.கவின் நிறுவக உறுப்பினர் ஒருவர் ஆவார்.

### பொதுத் தேர்தல் 2020


2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு புதிய கூட்டணியொன்றின் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு முன்னர், அனுமதித்திருந்த ஐ.தே.கவின் செயற்குழு, புதிய கூட்டணி தொடர்பில் பிளவடைந்ததையடுத்து, ஐ.தே.க பாரிய பிளவடைந்தது. பலம் வாய்ந்த ஐ.தே.கவில் ஒரு பிரிவினர் பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியாக (ஐ.ம.ச) போட்டியிட்டு, அதன் முதல் தேர்தலில் 54 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாகியது.

ஐ.தே.கவின் வரலாற்றில் முதற்தடவையாக நாடாளுமன்றத்தில் ஆசனம் ஒன்றை வெல்ல அக்கட்சி தவறியது. ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை மாத்திரம் பெற்றது. எனினும், தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரைத் தெரிவு செய்வது என ஐ.தே.க இன்னும் முடிவு எடுக்கவில்லை.

அண்மைய தேர்தலில் சு.க தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், அவரின் உறுப்பினர்களும் பெரமுனவுடனான கூட்டணியொன்றில் போட்டியிட்டனர். அவர்கள் நாடாளுமன்றத்தில் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொண்டனர்.

2020ஆம் ஆண்டு தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான பெரமுன பாரிய வெற்றியைப் பெற்று 145 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்றுக் கொண்டது.

### ஐ.தே.கவும் சு.கவும் நாட்டை தனித்ததொரு கட்சியாகவோ அல்லது கூட்டணியொன்றின் தலைமைப் பங்காளராகவோ ஆண்டன.




145 ஆசனங்களுடன் புதிய கட்சி பெரமுன பாரிய வெற்றி ஒன்றைப் பதிவு செய்தது.

1 பிரதமர் டி.எஸ். சேனநாயக்க 2 பிரதமர் டட்லி சேனநாயக்க 3 பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவ 4 பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்தன 5 ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன 6 ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ 7 ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க 8 பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

1 பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 2 பிரதமர் டபிள்யூ. தஹநாயக்க 3 பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 4 ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 5 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 6 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

Source: Wikipedia, Department of Elections, News reports

BY PRADEEP JAYAKODY ©TM GraphicDesk

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 7 செப்டெம்பர் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.